தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
1.11.2023 (புதன்கிழமை)

ஜிப்மரில்

# லஞ்ச ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு

புதுச்சேரி, நவ.1-

கோரிமேடு ஜிப்மர் மருத்துவமனையில் மத்திய லஞ்ச ஒழிப்பு ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரம் கடைபிடிக்கப்படுகிறது. அதன் ஒருபகுதியாக உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி ஜிப்மர் கல்வி மையத்தில் நடந்தது. நிகழ்ச்சிக்கு ஜிப்மர் முதல்வர் (ஆராய்ச்சி) டி.எம்.தப்பா தலைமை தாங்கினார். இதில் துணை மருத்துவ கண்காணிப்பாளர் பெட்சி மத்தாய் முன்னிலையில் மருத்துவமனை அதிகாரிகள், நிர்வாகப்பிரிவு அலுவலர்கள், மாணவர்கள் கலந்துகொண்டு லஞ்ச ஒழிப்புக்கு எதிராக உறுதிமொழி எடுத்தனர்.